பக்கங்கள்: 08

காலைக்கதிர்
Kalaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 சித்திரை 05 ஞாயிற்றுக்கிழமை 18.04.2021 கதிர் 32

## பாடசாலை ஆரம்பம் பற்றி கல்வி அமைச்சு அறிவிப்பு

நாளை திங்கட்கிழமை தொடக்கம் நாட்டின் அனைத்துப் பாடசாலைகளினதும் இரண்டாம் தவணை பாடசாலை கல்வி நடவடிக்கைகள் ஆரம்பமாகும் நிலையில், இது தொடர்பில் கல்வி அமைச்சு விசேட அறிவிப்பொன்றை வெளியிட்டுள்ளது.

அதற்கமைய, வகுப்பறையில் காணப்படும் மாணவர்களின்

2

# ‘போர்ட் சிட்டி’ சட்டமூலத்துக்கு எதிராக கொதித்தெழுந்தது அஸ்கிரிய பீடம்!



## கோட்டாவுடன் நேரில் பேசவும் முடிவு

அரசால் முன்வைக்கப்பட்டுள்ள கொழும்புத் துறைமுக நகரத்தை நிர்வகிப்பதற்கான ஆணைக்குழு சட்டமூலம் நாட்டின் சட்டத்திலும் அதிகாரத்திலும் பாதிப்பை ஏற்படுத்தும் என அறியமுடிகின்றது என்று தெரிவித்துள்ள அஸ்கிரிய பீடத்தின் தலைமை செயலாளர் மெதகம தம்மானந்த தேரர், இது குறித்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடன் பேசி ஒரு தெளிவைப் பெற்றுக்கொள்ள எண்ணியுள்ளோம் என்றும் தெரிவித்தார்.

எமது நாட்டுக்குத் தீங்கு விளைவிக்கும் எதாவது ஒரு காரணி கொழும்புத் துறைமுக நகர ஆணைக்குழு சட்டமூலத்தில் உள்ளடக்கப்படுமானால் அதனை எதிர்ப்பதே எமது பொறுப்பாகும் எனவும் அவர் மேலும் கூறினார்.

இதேவேளை, நாட்டின்

2

# காணாமலாக்கப்பட்டோருக்காக குரல் கொடுப்பது சமூகக் கடமை



## மன்னார் ஆயர் எடுத்துரைப்பு

(ந.லோகதயாளன்)

“வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர், சிறையில் அடைபட்டு இருப்போர் எனப் பல துன்பங்களுக்கு மத்தியில் வாழ்பவர்கள் எமது சமுதாயத்தில் இருக்கின்ற நிலையில் அவர்களுக்காகக் குரல் கொடுக்கின்றவர்கள் கட்டாயமாக நமது சமூகத்தில் இருக்க வேண்டும். அது சமூகக் கடமை.”

- இவ்வாறு மன்னார் மறைமாவட்ட ஆயர் கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தெரிவித்தார்.

2

# அஸாத் ஸாலியை வதைக்கும் அரசு!

## சிறப்பு விசாரணை ஆரம்பம் என்கின்றார் சரத் வீரசேகர



மேல் மாகாண முன்னாள் ஆளுநர் அஸாத் ஸாலி நாட்டில் தீவிரவாதத்தை வளர்த்துப் பாதுகாத்தாரா என்பது தொடர்பான விவரங்களை அறிய சிறப்பு விசாரணை தொடங்கப்பட்டுள்ளது எனப்

2

# கோட்டாபயவின் அச்சுறுத்தலை அம்பலப்படுத்திய விஜேதாஸவுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை

## ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி தீர்மானம்

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜேதாஸ ராஜபக்ஷவுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒழுங்குநடவடிக்கைஎடுப்பதற்கு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி ஒரு அமைப்பைக் கொண்டுள்ளது என்றும், அந்த அமைப்பு குறித்த விடயத்தை கையாளும் என்றும் அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

அரசையும், ஜனாதிபதியையும் விஜேதாஸ ராஜபக்ஷ விமர்சனம் செய்த காரணத்தால் ஒழுக்காற்று நடவடிக்கை

2



## கொழும்புத் துறைமுக நகரத்தில்

# சீனப் பொலிஸார் கடமையில் அமர்த்தப்படவேமாட்டார்கள்!

## அரசு உத்தரவாதம்



கொழும்புத் துறைமுக நகரத்தில் சீனப் பொலிஸார் கடமையில் அமர்த்தப்படுவார்கள் என்ற கருத்தை கோட்டாபய அரசு நிராகரித்துள்ளது.

கொழும்புத் துறைமுக நகரத்தின் சட்டம் மற்றும் ஒழுங்கை இலங்கை பொலிஸார் மாத்திரமே நிர்வகிப்பார் என்று மூலதன சந்தை மற்றும் அரச தொழில் முயற்சி மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சர் அஜித் நிவார்ட் கப்ரால் தெரிவித்தார்.

கொழும்புத் துறைமுக நகரம் ஒரு சீன காலனியாக இருக்கும் என்றும், அங்கு சீனப் பொலிஸார்

2

# கொரோனாத் தடுப்பூசியின் அடுத்த தொகுதி விரைவில்

## இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி நம்பிக்கை



‘ஒக்ஸ்போர்ட் - அஸ்ட்ரா ஜெனெகா’ தடுப்பூசியின் அடுத்த தொகுதி ஏப்ரல் இறுதியில் அல்லது மே மாத தொடக்கத்தில் நாட்டை வந்து சேரும் என்று கொரோனாத் தடுப்பு நடவடிக்கைகள் தொடர்பான இராஜாங்க

2

# பரவிப்பாஞ்சான் குளத்தில் 2 சிறுவர்கள் மூழ்கிப் பலி!

## முள்ளிப்பொத்தானையில் சோகம்

(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை- தம்பலகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பரவிபாஞ்சான் குளத்திற்கு குளிக்க சென்ற இரண்டு சிறுவர்கள் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

2

# டிப்பரில் கஞ்சா கடத்தல்!

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஏப்.18

மன்னாரில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு இன்று அதிகாலை டிப்பரில் கடத்திய கேரளக் கஞ்சா இலுப்பைக் கடவைப் பகுதியில் வைத்துப் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

மன்னாரில் இருந்து டிப்பரில் இன்று அதிகாலை 2 மணியளவில் கஞ்சா கடத்துவதான இரகசிய தகவலின் பெயரில்

2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோட்டாபயவின் அச்சுறுத்தலை அம்பலப்படுத்திய .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
எடுக்கப்படவுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார்.

விஜேதாஸ ராஜபக்ஷவின் அரசியல் வரலாறு மற்றும் அவருடைய நடத்தை பற்றி பொதுமக்கள் நன்கு அறிவர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தன்னைக் கடுந்தொனியில் இழிவாகத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு திட்டினார் என்றும், அதனால் தனது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் விஜேதாஸ ராஜபக்ஷ குற்றம் சுமத்தியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## பரவிப்பாஞ்சான் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இவ்வனர்த்தம் இன்று காலை 10.00 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு உயிரிழந்த சிறுவர்கள் முள்ளிப்பொத்தானை,ஈச்சநகர் பகுதியைச் சேர்ந்த சுஹைல் சக்தி (13வயது) மற்றும் முள்ளிப்பொத்தானை - 95 யைச் சேர்ந்த அலிப்தீன் அஸ்கார் (13 வயது) எனவும் தெரியவருகின்றது.

நோன்பு பிடித்துக் கொண்டு சிறுவர்கள் சிலர் சேர்ந்து தம்பலகாமம் - முள்ளிப்பொத்தானை பிரதேசத்தில் உள்ள பரவிப்பாஞ்சான் என்ற குளத்துக்கு குளிக்கச் சென்ற போது இவர்கள் நீரில் மூழ்கினர் என்று கூறப்படுகின்றது. இருவரும் மீட்கப்பட்டு கந்தளாய் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில் அச்சிறுவர்கள் உயிரிழந்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த சிறுவர்களின் சடலம் தற்பொழுது கந்தளாய் வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. மேலதிகவிசாரணைகளைதம்பலகாமம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## கொரோனாத் தடுப்பூசி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோ புள்ளே தெரிவித்தார்.

அத்தோடு ரஷ்யாவின் 'ஸ்பூட்னிக் - வி' தடுப்பூசியையும் குறித்த காலப்பகுதியில் பெற்றுக்கொள்ள எதிர்பார்த்திருப்பதாகவும் அவர் கூறினார்.

இந்தியாவில், கொரோனாத் தொற்று அதிகரித்து வருவதன் காரணமாக 'அஸ்ட்ரா ஜெனொகா' தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்வதில் தாமதம் நிலவுகின்றது எனவும் இராஜாங்க அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

இதன் காரணமாக மாற்றுத் தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்வது தொடர்பில் கவனம் செலுத்தப்படுகின்றது எனவும் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே மேலும் குறிப்பிட்டார்.

## சீனப் பொலிஸார் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சட்டம் - ஒழுங்கை நிர்வகிப்பர் என்றும் பரவலாக பேசப்பட்டு வரும் கருத்தை நிராகரித்த அஜித் நிவார்ட் கப்ரால், கொழும்புத் துறைமுக நகரம் இலங்கை அரசின் கட்டுப்பாட்டிலேயே இருக்கும் என்றும் தெரிவித்தார்.

முன்மொழியப்பட்டுள்ள போர்ட் சிட்டி பொருளாதார ஆணைக்குழு சபை சட்ட மூலம் கொழும்புத் துறைமுக நகரத்தை சீனக் காலனியாக மாற்றாது என்றும் அவர் கூறினார்.

போர்ட் சிட்டி பொருளாதார ஆணைக்குழு சபை சட்டமூலம் நிறைவேற்றப்பட்டதும் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட ஒரு ஆணையம் கொழும்புத் துறைமுக நகரத்தின் மீது கட்டுப்பாட்டைக் கொண்டிருக்கும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

## டிப்பரில் கஞ்சா .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மேற்கொண்டதிடீர்சோதனையின்போது 90 கிலோ கஞ்சா மீட்கப்பட்டுள்ளது. இவ்வாறு கைப்பற்றிய கஞ்சாவை கடத்திய மூவர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது கைது செய்யப்பட்ட மூவரும் வவுனியா, தெட்சனாமருதமடு, நானாட்டான் ஆகிய இடங்களைச் சேர்ந்தவர்கள் எனத் தெரியவருகின்றது. கைது செய்யப்பட்ட மூவரையும் இலுப்பைக் கடவைப் பொலிஸார் நாளை மன்னார் நீதிமன்றில் முற்படுத்தவுள்ளனர்.

## அஸாத் ஸாலியை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ரியர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அஸாத் ஸாலி ஆளுநர் பதவியில் இருந்தவேளையில் தீவிரவாதத்தை வளர்ப்பதற்கும், அது தொடர்பான பிரசாரங்களை மேற்கொள்வதற்கும் எவ்வாறு பாடுபட்டார் என்பது குறித்த தகவல்கள் சேகரிக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பாக சி.ஐ.டி. மற்றும் ரி.ஐ.டி. இணைந்து சிறப்பு விசாரணையைத் தொடங்கியுள்ளன.

மாவனெல்லயில் புத்தர் சிலைகள் உடைக்கப்பட்ட விவகாரம் மற்றும் வணாத்தவில்ல பிரதேசத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த வெடிபொருள்களுடன் தொடர்புடைய சந்தேக நபர்களைப் பாதுகாத்த குற்றச்சாட்டில் முன்னாள் ஆளுநருக்கு எதிராக ஆதாரங்கள் சேகரிக்கப்பட்டுள்ளன.

மேலும், முஸ்லிம் பள்ளிவாசல்கள், உள்ளூர் மதரஸாக்களில் தீவிரவாதக் கருத்துக்களைப் பரப்புவதற்கு உதவியது போன்ற குற்றச்சாட்டின் பேரிலும் அஸாத் ஸாலி விசாரிக்கப்படுகின்றார் - என்றார்.

## காணாமலாக்கப் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
துணிச்சல் மிக்க பெண்மணிக்கான சர்வதேச விருதைப் பெற்ற மன்னாரைச் சேர்ந்த சட்டத்தரணி ரனித்தா ஞானராஜாவை கௌரவிக்கும் நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

நேற்று சனிக்கிழமை மாலை மன்னார் நகர மண்டபத்தில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

இதன்போது பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய ஆயர் கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை, மறைந்த இராயப்பு ஜோசப் ஆண்டகையை நினைவுப்படுத்தி கருத்து தெரிவித்தார்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் மற்றும் சிறையில் அடைக்கப்பட்டுள்ளோர் எனப்பல்வேறு பிரச்சினைகள் தொடர்பில் ஆயர் இராஜப்பு ஜோசப் ஆண்டகை மக்களுக்காகக் குரல் கொடுத்தார். இப்போது அவரை நாங்கள் இழந்துவிட்டோம் என்று இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை குறிப்பிட்டார்.

இந்நிலையில் மக்கள் பிரச்சினைகளை அறிந்து அவர்களுக்காகக் குரல் கொடுக்கின்றவர்கள் கட்டாயமாக இந்தச் சமூகத்தில் தேவைப்படுகின்றார்கள் என்றும் ஆயர் சுட்டிக்காட்டினார்.

அந்தவகையில் சட்டத்தரணி ரனித்தா ஞானராஜா இந்த இளம் வயதில் அவருடைய திறமையால் இந்த மக்களுக்காகக் குரல்கொடுத்து துணிச்சலுள்ள பெண்மணிக்கான சர்வதேச விருதைப் பெற்றுக்கொண்டுள்ளார். இவ்வாறாக சமூகத்தில் மக்களுக்காகக் குரல் கொடுப்பவர்கள் இருக்க வேண்டும். - என்றார்.

## 'போர்ட் சிட்டி' .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நிலத்தை குத்தகைக்கு வழங்கவோ அல்லது வெளிநாடுகளுக்கு விற்கவோ அரசுக்கு உரிமை இல்லை என இலங்கை ராமஞ்ஞ பௌத்த பீடத்தின் பிரதான நாயக்கர் ஓமல்பே சோபித தேரர் தெரிவித்தார். சில அரசியல் கட்சிகள் பல்வேறு தந்திரோபாயங்கள் மூலம் நாட்டைக் கைப்பற்ற முயற்சிக்கின்றனர் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டைப் பிளவுபடுத்துவதற்கான 30 ஆண்டுகால போராட்டம் முடிவுக்கு வந்த போதும் இப்போது நாம் மற்றொரு சிக்கலை எதிர்கொள்கின்றோம். துறைமுக நகரம் என்ற பெயரில் நாட்டின் சில பகுதிகளைக் கைப்பற்றும் முயற்சியாகவே நவீன சீன காலனியை நாங்கள் பார்க்கின்றோம். புதிய சீன காலனி புறக்கணிக்கப்பட வேண்டும். ஐந்து அல்லது ஆறு ஆண்டுகள் ஆட்சியில் இருப்பவர்களுக்கு நாட்டின் நிலத்தைக் குத்தகைக்கு வழங்கவோ அல்லது விற்பனை செய்வதற்கோ எந்த உரிமையும் இல்லை. - என்றார்.

## பாடசாலை ஆரம்பம் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
எண்ணிக்கை 15இற்கு குறைவெனில், சகல மாணவர்களையும் தினமும் பாடசாலைகளுக்கு வரவழைக்க முடியும். 16 முதல் 30 வரையான மாணவர்கள் வகுப்பறைகளில் இருப்பார்களாயின் இரண்டு பிரிவுகளாக அவர்களைப் பிரிக்கவும். 30 இற்கு மேல் மாணவர்கள் இருப்பார்களாயின் 3 பிரிவுகளாகபிரித்துமாணவர்களை பாடசாலைகளுக்கு வரவழைக்க முடியுமென, அமைச்சின்செயலாளர்பேராசிரியர் கபில பெரேரா அறிக்கை மூலம் குறிப்பிட்டுள்ளார்.

# படையினர் கெடுபிடி



மரக்கடத்தல் வாகனம் இராணுவத்தினர் மீது மோதிவிட்டு தப்பி ஓடியதையடுத்து வவுனியா, ஓமந்தை சோதனைச் சாவடி ஊடாக செல்லும் வாகனங்கள் மீதான சோதனைக் கெடுபிடிகள் அதிகரித்துள்ளது என பயணிகள் தெரிவித்துள்ளனர்.

வவுனியா, ஓமந்தை ஏ9 வீதியில் உள்ள சோதனைச் சாவடியில் நேற்று மாலை மரக் கடத்தலில் ஈடுபட்ட வாகனம் ஒன்று இராணுவத்தினர் வழிமறித்த போது நிறுத்தாது இரு இராணுவத்தினர் மீது மோதியதுடன், அங்கிருந்து தப்பிச் சென்று பாலம் ஒன்றில் மோதி விபத்துக்குள்ளாகியிருந்தது. இதில் இரு இராணுவத்தினர் படுகாயமடைந்திருந்தமையுடன், வாகனச் சாரதியும் தப்பியோடியிருந்தார்.

இதனையடுத்து, அந்த இராணுவச் சோதனைச் சாவடி ஊடாக செல்லும் மோட்டர் சைக்கிள்கள், பஸ்கள் மற்றும் ஏனைய வாகனங்கள் என அனைத்து வாகனங்களும் மறிக்கப்பட்டு சோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன. சில மணி நேரம் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் பயணிகள் தெரிவிக்கின்றனர். அத்துடன் குறித்த இராணுவ சோதனைக் கெடுபிடிகளால் பயணிகளும் அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

**வேலையாட்கள் தேவை**

யாழ்ப்பாணத்தில் உள்ள குளிர்பான விநியோகஸ்த நிலையத்துக்கு SALES REP தேவை.
மாதம் 45,000 சம்பாதிக்கலாம்.

தொடர்புகளுக்கு
0774737737/ 0773257747




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## தடுப்பூசி ஏற்றலில் தடுமாற்றம்

**ஜனநாயகம், அரசியல் தீர்வு, நல்லிணக்கம், பொருளாதாரம், அபிவிருத்தி என்ற எல்லாத் துறைகளிலுமே தோற்றுப்போன நாடாக அறிவிக்கப்படும் இழிநிலையை நோக்கிச் சென்று கொண்டிருக்கும் இலங்கை, இன்னொரு துறையிலும் பின்னடைந்து, நலிவுற்று, தோல்வியின் விளிம்பை நோக்கி நகர்ந்து கொண்டிருப்பது வெளிப்படையாகத் தெரிகின்றது.**

**அது கொரோனாப் பேரரக்கனை எதிர்கொள்ளும் விடயத்தில் நாம் – நமது நாடு – எதிர்கொள்ளப் போகும் பெரும் பாதிப்பும், பின்னடைவும். அடுத்த இரண்டு தலைமுறைகளுக்கு நாம் நிமிர முடியாத அதலபாதாள நிலைமையை அது ஏற்படுத்தி விடலாம்.**

**'கொவிட்' தொற்று நமது நாட்டிலும் கால் பதித்து அது தன் கைவரிசையை காட்டத் தொடங்கி ஓராண்டு கடந்து விட்டது. இன்னும் கூட அதைக் கையாள்வதற்கான முறையான திட்டம் – முக்கியமான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான வழிமுறை – வகுக்கப்படவேயில்லை என்பதுதான் வேதனையிலும் வேதனை.**

**உலகத்தில் இருந்து கொரோனா வைரஸ் முழுமையாக ஒழிக்கப்படும் வரை அதன் தாக்கத்தை – வீரியத்தை – பாதிப்பை – நாம் எதிர்கொண்டுதானாக வேண்டும். அதற்கு வழி நாட்டை முடக்குவதல்ல என்ற பாடத்தையும் பொருளாதாரப் பாதிப்புக்கள், இழப்புகள், பின்னடைவுகள் மூலம் நாம் படித்துத் தெளிந்தும் விட்டோம். ஆக, கொரோனாவுடன்தான் வாழ்வது என்பது தவிர்க்க முடியாத கட்டாயம்.**

**ஆக, அதையும் தாண்டி அடுத்த கட்டத்தில் இந்தப் பிரச்சினையை எதிர்கொள்ள நாம் தயாராக வேண்டும்; தயாராகியிருக்க வேண்டும்.**

**முதலாவது – தொற்றுப் பரவலை இயன்றவரை கட்டுப்படுத்த வேண்டும்.**

**அதற்கு சுகாதார, மருத்துவ அதிகாரிகளின் வழி காட்டல்படி நடக்க வேண்டும். அதை நெறிமுறைப்படுத்துவது அரசினதும் அதிகாரிகளினதும் கைகளில் தங்கியிருந்தாலும் பொறுப்பு மக்களையும் சமூகத்தையும் சார்ந்ததாகும்.**

**முகக் கவசம் அணிதல், அடிக்கடி கைகளைக் கழுவுதல், சமூக இடைவெளியைப் பேணுதல் என்ற கட்டுப்பாடுகளுடன்தான் அன்றாட வாழ்க்கையைக் கொண்டு செல்ல வேண்டும்.**

**இது விடயத்தில் அரசையும், அதிகாரிகளையும் குறை கூறுவதில் அர்த்தமில்லை. இது தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் மேற்படி இருதரப்பினரும் – அரசும், அதிகாரிகளும் – இயன்றளவு சாத்தியமான முயற்சிகளை எடுத்திருக்கின்றார்கள் என்பது மறுக்கப்பட முடியாத உண்மையே.**

**எனினும், இந்த ஒழுங்குகளை நடைமுறைப்படுத்துவதில் அவர்கள் இன்னும் கரிசனை – தீவிரம் – அழுத்தம் – பிரயோகித்திருக்கலாம். பிரயோகித்திருக்க வேண்டும் என்ற குறை உள்ளதுதான்.**

**அடுத்தது – தொற்றுப் பரவலை கண்டுபிடிக்கும் சோதனைகளைப் தீவிரப்படுத்துவது.**

**ஆரம்பத்தில் இதில் பின்னடைவு இருந்த போதிலும் பின்னர் ஓரளவுக்கு இவ்விவகாரத்தில் அரசு கணிசமாகச் செய்திருக்கின்றது. அதிகாரிகள் இயன்ற அளவில் மும்முரமாக இதில் ஈடுபடுகின்றார்கள் என்பதை நாம் ஒப்புக் கொண்டேயாகவேண்டும்.**

**ஆனால் இவை எல்லாவற்றையும் தாண்டி, மூன்றாவது விடயம் தான் கொரோனாத் தடுப்பு நடவடிக்கையில் மிக முக்கியமான பணியாகும். அது கொரோனத் தடுப்பூசி ஏற்றலாகும்.**

**அதில் என்னவோ, அரசு மிதமிஞ்சிய அசிரத்தையுடன், பொறுப்பின்றி, ஏனோ தானோ என்று நடப்பதாகத் தோன்றுகின்றது.**

**கொரோனாத் தொற்றுத் தடுப்பின் மிக முக்கிய விடயத்தில் அரசு விட்டேத்தியாக நடப்பது மக்களுக்கு மட்டுமல்ல, அதிகாரிகளுக்கும் கூட ஆச்சரியத்தை தந்து நிற்கின்றது என்பதுதான் நிலைமை.**

**உலக நாடுகள் முழுவதும் கொரோனத் தடுப்பூசி ஏற்றலில் முழு மூச்சுடன் செயற்பட நமது நாடு மட்டும் தடுப்பூசி ஏற்றல் ஆரம்பித்து மூன்று மாதங்கள் கடந்த பின்னரும் முறையான திட்டமிடல், ஏற்பாடுகள், ஒழுங்குமுறைகள் இல்லாமல் தடுமாறுகின்றது.**

**கொரோனாத் தடுப்பூசி ஒவ்வொருவருக்கும் குறிப்பிட்ட கால இடைவெளியில் இரண்டு 'டோஸ்கள்' வழங்கப்பட வேண்டும். அப்படி இரண்டு டோஸ்கள் வழங்கினாலும் கூட அந்தத் தடுப்பு மருந்துச் சக்தியின் வீரியம் எவ்வளவு காலம் தாக்குப் பிடிக்கும் என்பதில் தடுமாற்றம் உள்ளது. ஒன்பது மாதங்களா, ஒரு வருடமா அல்லது இரண்டு வருடங்களா அல்லது வாழ் நாள் முழுவதுமா என்ற சந்தேகம் நிலவுகின்றது. இந்தப் பின்புலத்தில் ஆறு மாத காலத்தில் கூட இலங்கையில் கால் பங்கினருக்குக் கூட தடுப்பூசி முழுமையாக ஏற்றிவிட முடியுமா என்பது சந்தேகமே.**

**இதுவரை பன்னிரண்டரை லட்சம் தடுப்பூசிகள் நம் நாட்டுக்கு வந்துள்ளன. ஒன்பதே கால் லட்சம் பேருக்கு முதல் 'டோஸ்' கொடுத்தாயிற்று. கைவசம் ஆக 3 லட்சத்து 40ஆயிரம் டோஸ்கள் உள்ளன. அடுத்த ஒரு மாத காலத்துக்குள் இரண்டாம் கட்ட 'டோஸ்' வழங்கவே சுமார் 4 லட்சம் ஊசிகள் தேவை. கையிருப்பில் இருப்பது அதற்குக் கூட போதாது. அப்படியானால் இனி புதிதாக யாருக்கும் தடுப்பூசி போடவோ, ஒரு மாதத்திற்குப் பின் இரண்டாம் கட்ட டோஸ் வழங்கவோ தடுப்பூசி கைவசம் இல்லை என்பதுதான் நிலைமை.**

**தடுப்பூசி ஏற்றும் விடயத்தில் நாடு பெரும் தோல்வியை – பின்னடைவை – சந்திக்கப் போகின்றது என்பது நிதர்சனமான உண்மை.**

# 2022 மாகாணசபைத் தேர்தல்? அரச வட்டாரங்கள் தெரிவிப்பு

நான்கு ஆண்டுகளாக நடத்தப்படாமல் இழுபறி நிலையிலுள்ள மாகாண சபைத் தேர்தலை அடுத்தாண்டின் ஆரம்பத்தில் நடத்துவதற்கான அநேக சாத்தியங்கள் உள்ளன என அரச வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் பங்காளிக் கட்சிகளுக்கிடையே ஒருமித்த நிலைப்பாட்டுக்கு வரமுடியாத காரணத்தால் மாகாண சபைத் தேர்தலை நடத்த இன்னும் சில மாதங்களாகும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

4 ஆண்டு காலமாக இழுபறி நிலையிலுள்ள மாகாண சபைத் தேர்தலை புதிய முறைப்படி நடத்துவதா? அல்லது பழைய முறைப்படி நடத்துவதா? என்ற காரணத்தாலேயே இந்நிலை ஏற்பட்டுள்ளது. ஆகவே, மாகாண சபைத் தேர்தலை அடுத்தாண்டின் ஆரம்பத்தில் நடத்துவதற்கான அநேக சாத்தியங்கள் உள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

மாகாண சபை உறுப்பினர்களில் 70 சத வீதமானோர் தொகுதிவாரியாகவும், 30 சத வீதமானோர் விகிதாசார முறையிலுமாக கலப்பு முறையில் மாகாண சபைத் தேர்தலை நடத்த இணக்கம் காணப்பட்டுள்ளது. எனினும், ஒரு தொகுதியில் ஒரே கட்சியைச் சேர்ந்த மூவரை வேட்பாளர்களாக நிறுத்தும் யோசனைக்கு அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் 11 கட்சிகள் இதுவரையில் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன.

இதேவேளை, மாகாண சபைத் தேர்தலில் மாவட்டத்துக்கு தலா 2 மேலதிக ஆசனங்கள் வழங்குவது குறித்த யோசனைக்கும் அரசாங்கத்தின் பங்காளிக் கட்சிகளிடையே முடிவு எட்டப்படவில்லை.

மாகாண சபைத் தேர்தல் தொடர்பிலான பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் பங்காளிக் கட்சிகளிடையேயான சந்திப்பு நாளை 19 ஆம் திகதி காலை அலரி மாளிகையில் நடைபெறவுள்ளது.

# மாவை சேனாதிராசாவே முதலமைச்சர் வேட்பாளர்!

## பங்காளி புளொட் உறுதி



மாகாணசபைத் தேர்தல் ஒன்று இடம்பெறுமானால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் மாவை சேனாதிராசாவே முதலமைச்சர் வேட்பாளராக நிறுத்தப்படுவார் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.

எனினும், மாகாணசபைத் தேர்தலை நடத்தும் எண்ணம் அரசாங்கத்திடம் மிகக் குறைவாகவே காணப்படுவதாகவும் அவர் கூறியுள்ளார். அவரது இலத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர் -

தற்போதைய அரசாங்கம் மாகாணசபைத் தேர்தல்களை நடத்தும் நிலைப்பாட்டிலிருந்து விலகிச் செல்வதற்கான அறிகுறிகளே பெரும்பாலும் காணப்படுகின்றன.

எல்லைநிர்ணயக்குழுவை ஏற்படுத்தி மாகாணசபை தேர்தல்களை பிற்போடுவதற்கான முயற்சிகள் அரங்கேறி வருகின்றன. மாகாண சபையைப் பொறுத்தவரை அரசியல் பேசும் இடமல்ல, அதிகாரிகளுடன் இணைந்து அபிவிருத்திகளைத் திட்டமிட்டு செயற்படுத்தக்கூடிய சபை.

இதனை நன்கு செயற்படக் கூடிய ஆளுமை அரசியல் அறிவு அதிகாரிகளுடன் அன்னியோன்னியமாக நடந்து கொள்ளக் கூடிய ஆற்றல் மற்றும் தமிழ் மக்களுடைய ஆரம்ப கால வரலாறுகளை நன்கு அறிந்தவராக மாவை சேனாதிராசா காணப்படுகிறார்.

மணிவண்ணன் தொடர்பில் கருத்துக்களும் முன்வைக்கப்படுகின்றன. மணிவண்ணன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் அல்லர். அவரை முதலமைச்சர் வேட்பாளராக நிறுத்த வேண்டுமென்றால் அதனை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள் அனைவரும் சேர்ந்து எடுக்க வேண்டிய முடிவு.

ஆகவே மாவை சேனாதிராசாவை முதலமைச்சர் வேட்பாளராக நிறுத்தும் கருத்து எனது தனிப்பட்ட நிலைப்பாடு. அதற்கான காரணங்களையும் கூறியுள்ளேன் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# ஊர்காவற்துறை பிரதேச சபை உறுப்பினர் திருமதி வின்சன் சுபத்ரா காலமானார்



யாழ்ப்பாணம், ஏப். 18

அனலைதீவில் பல செயற்பாடுகளை மேற்கொண்ட ஊர்காவற்துறை பிரதேச சபை உறுப்பினர் திருமதி வின்சன் சுபத்ரா நேற்று சனிக்கிழமை இரவு மாரடைப்பினால் காலமானார்.

கொரோனா காரணமாக பெரும் பாதிப்புகளுக்கு உள்ளான அனலைதீவு, அல்லைப்பிட்டி பகுதிகளில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த 14 குடும்பங்களுக்கு ரூபா 42 ஆயிரம் ரூபா பெறுமதிமிக்க உலர் உணவுப்பொருள்கள், முகக் கவசம், கிருமிநாசினி பொருள்கள் என்பன தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் ஊடாக வழங்க இவர் பெரும் பங்காற்றியுள்ளார்.

# கடந்த 10 ஆண்டுகளில் விபத்தில் 27 ஆயிரம் பேர் சாவு

## அமைச்சர் வெளிப்படுத்திய தகவல்

போதையில் வாகனம் செலுத்தும் சாரதிகளை அடையாளம் காண்பதற்குத் தேவையான சாதனங்களை இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என அரசாங்கம் அறிவித்துள்ளது.

பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ரியர் அட்மிரல் சரத் வீரசேகர இதனை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் தொடர்ந்தும் கருத்து வெளியிட்டுள்ள அவர் -

'கடந்த பத்து ஆண்டுகளில் நாட்டில் வீதி விபத்துக்களில் 27 ஆயிரம் பேர் இறந்துள்ளனர். 'போரின் போது கூட, 29 ஆயிரம் பேர் மட்டுமே இறந்தனர். இதன்படி, இந்த பேரழிவைத் தடுக்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் உள்ளது.

இந்த சூழ்நிலையை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுக்க ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளது' என அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில், குடிபோதையில் வாகனம் செலுத்தும் நபர்களை அடையாளம் காணும் நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுகின்றன.

தற்போது பொலிஸார் குடிபோதையில் வாகனம் செலுத்திய 783 பேரை கைது செய்து சட்ட நடவடிக்கை எடுத்துள்ளனர். கைது செய்யப்பட்டவர்களில் 534 மோட்டார் சைக்கிள் ஓட்டுநர்கள், 180 ஓட்டோச் சாரதிகள் என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்நாடு சமையல் தொழிலாளர் ஆர்ப்பாட்டம்



திருமணநிகழ்ச்சிகளின்போது, மண்டபங்களில் 50 சதவீதம் பேர் பங்கேற்க அனுமதிக்கக்கோரி நேற்று சென்னை வள்ளுவர் கோட்டம் அருகே, தமிழ்நாடு சமையல் கலை தொழிலாளர் முன்னேற்ற சங்கத்தினர் சார்பில் கவனயீர்ப்பு நிகழ்வு ஒன்று நடைபெற்றது.

நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்ட இந்த ஆர்ப்பாட்டத்துக்கு அச்சங்கத்தின் மாநில தலைவர் எம்.ஜி.ராஜாமணி தலைமை தாங்கினார். மாநில பொது செயலாளர் இட்லி இனியவன், மாநில செயலாளர் கலைமாமணி சி.வி.ரமேஷ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தின் போது, திருமண மண்டபத்தில் 50 சதவீதம் பேரை அனுமதிக்க வேண்டும் என கோஷங்கள் எழுப்பினர்.

"கடந்த ஊரடங்கின்போது அதிகளவு பாதிக்கப்பட்டவர்கள் சமையல் துறையினரே. திருமணம் மற்றும் சுப நிகழ்ச்சிகளை மட்டுமே வாழ்வாதாரமாகக் கொண்டு பல லட்சம் சமையல் தொழிலாளர்கள் இருந்து வருகிறார்கள். இந்த நிலையில் சுப நிகழ்ச்சிகள் ரத்தாவதால் அவர்கள் அனைவரும் பாதிப்புக்கு ஆளாகின்றனர்.எனவே, அரசு 100 பேர் மட்டுமே கலந்துகொள்ளலாம்என்பதைமாற்றிஆயிரம் பேர் அமரக்கூடிய திருமண மண்டபங்களில் 50 சதவீதம் பேர்கலந்துகொண்டுபாதுகாப்பு வழிமுறைகளைப் பின்பற்றி திருமணங்களை நடத்த அனுமதிக்கவேண்டும். எங்கள் பிரச்சினைக்கு தீர்வு கிடைக்கவில்லை என்றால் தமிழகம் முழுவதும் போராட்டத்தை தீவிரப்படுத்துவோம்" என்று அவர்கள் தெரிவித்தனர்.

# மே 2 - இல் மம்தா முன்னாள் முதல்வர்! பிரசாரக் கூட்டத்தில் பிரதமர் மோடி



மேற்கு வங்க மாநில சட்டசபை தேர்தலையொட்டி, அசன்சோல் நகரில் நடைபெற்ற பா.ஜனதா கட்சியின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில்பிரதமர்மோடிகலந்துகொண்டார்.

அங்கு அவர் உரையாற்றிய போது, "வங்காளப் புத்தாண்டுக்குப் பின்னர் இதுதான் எனது முதல் பொதுக்கூட்டம். திரிணாமுல் காங்கிரஸ் பயந்து போயுள்ளது. பிணங்களை வைத்து மம்தா பானர்ஜி அரசியல் நடத்துகிறார். மே 2 ஆம் திகதி மம்தா பானர்ஜி, 'முன்னாள் முதலமைச்சர்' என்ற சான்றிதழைப் பெற்று விடுவார்.

உங்கள் வாக்குகள் திரிணாமுல் காங்கிரஸை ஆட்சியில் இருந்து இறக்குவதுடன் மாபியா ராஜ்யத்தையும் நீக்கிவிடும். அதுதான் உங்கள் வாக்கின் வலிமை. மேற்கு வங்காளத்துக்குத் தேவை இரட்டை இயந்திர அரசுதான். வளர்ச்சியைத் தடுக்கும் அரசு அல்ல. கடந்த 10 ஆண்டுகளாக வளர்ச்சியை தடுத்து அவர் துரோகம் செய்துள்ளார்.

மத்திய அரசின் வளர்ச்சித் திட்டங்களுக்கும் மேற்கு வங்காள மக்களுக்கும் இடையே அவர் சுவர் போல் நின்று கொண்டார். இதனால், மக்களுக்குக் கிடைக்க வேண்டிய பலன்களைப் பறித்துக்கொண்டார்.

மக்களுக்கு 5 லட்சம் ரூபா வரை இலவச மருத்துவக் காப்பீட்டை அளிக்க மத்திய அரசு முன்வந்தது. ஆனால், மம்தாவோ இடையில் சுவராக நின்று கொண்டார். முத்தலாக்கில் இருந்து முஸ்லிம் பெண்களை விடுவிக்க மத்திய அரசு சட்டம் இயற்றியது. ஆனால், மம்தா கோபத்தையே வெளிப்படுத்தினார்.

இடைத்தரகர்களிடம் இருந்து விவசாயிகளைப் பாதுகாக்க மத்திய அரசு சட்டம் இயற்றியது. அதையும் எதிர்த்தார். 'மா, மதி, மனுஷ்' என்று பேசும் மம்தா பானர்ஜி, மாபிய ராஜ்யத்தைத்தான் இங்கே வளர்த்துள்ளார்.

முன்பெல்லாம் வேலை தேடி மக்கள் அசன்சோல் நகருக்கு வருவார்கள். அந்த அளவுக்கு எல்லா தொழிற்சாலைகளையும் இங்கே பார்க்க முடியும். ஆனால், இப்போது இங்குள்ள மக்கள் வேலை தேடி வேறு நகருக்குச் செல்கிறார்கள். திரிணாமுல் காங்கிரஸின் மோசமான நிர்வாகமே இதற்குக் காரணம்" என்று குறிப்பிட்டார்.

# மேற்கு வங்கத்தில் 5 ஆம் கட்டத் தேர்தலில் 78% வாக்குப்பதிவு

## சில இடங்களில் வன்முறை



மேற்கு வங்கத்தில் நேற்று நடந்த 5 ஆம் கட்டத் தேர்தலில், ஒரு சில இடங்களில் வன்முறைகள் நடந்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இத்தேர்தலில் 78.36 சதவீத வாக்குகள் பதிவாகின.

மேற்கு வங்க சட்டப்பேரவைக்கு 8 கட்டங்களாக தேர்தல் அறிவிக்கப்பட்டு, ஏற்கனவே 4 கட்ட வாக்களிப்புகள் முடிவடைந்துவிட்டன. 45 தொகுதிகளில் நேற்று பலத்த பாதுகாப்புடன் 5 ஆம் கட்ட தேர்தல் நடந்தது. இதில், ஒரு சில தொகுதிகளில் சிறிய அளவில் வன்முறைகள் நடந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

பிதன் நகரில் பா.ஜ.க. – திரிணாமுல் தொண்டர்கள் இடையே மோதல் ஏற்பட்டதாகவும், வாக்காளர்களை வாக்குச்சாவடிக்கு செல்லவிடாமல் தடுப்பதாக இருதரப்பும் பரஸ்பரம் குற்றஞ் சாட்டியதுடன் கற்கள், செங்கல் போன்றவற்றையும் வீசித் தாக்கிக் கொண்டதாகக் கூறப்படுகிறது. மத்திய பாதுகாப்பு படை சம்பவ இடத்துக்கு அழைக்கப்பட்டு நிலைமை கட்டுக்குள் கொண்டு வரப்பட்டதாக அப்பகுதி மக்கள் தகவல் அளித்துள்ளனர்.

# ரெம்டெசிவிர் மருந்தின் விலை குறைப்பு அமைச்சர் டுவிட்டரில் தகவல்




கொரோனா சிகிச்சைக்கு பயன்படுத்தப்படும் ரெம்டெசிவிர் மருந்தினை மருந்து நிறுவனங்கள் அதிகரித்த விலைக்கு விற்கின்றன என புகார்கள் எழுந்தன. இப்போது, மத்திய அரசின் தலையீட்டைத் தொடர்ந்து பல்வேறு நிறுவனங்களும் ரெம்டெசிவிரின் விலையைக் கணிசமாகக் குறைத்துள்ளது என தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தகவலை மத்திய இரசாயனம் மற்றும் உரத்துறை அமைச்சரான மசுக் எல்.மான்டவியா தனது 'டுவிட்டர்' பக்கத்தில் வெளியிட்டுள்ளார்.

சில நிறுவனங்கள் ரெம்டெசிவிர் மருந்தின் விலையை இரண்டாயிரத்து 800 இல் இருந்து 899 ஆகவும், ஐந்தாயிரத்து 400 இல் இருந்து இரண்டாயிரத்து 700 ஆகவும் குறைத்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

## வேளச்சேரி தொகுதி மறு வாக்குப் பதிவு 186 பேர் மட்டுமே வாக்களித்தனர்

வேளச்சேரி தொகுதிக்குட்பட்ட 92 ஆவது எண் வாக்குச் சாவடியில் நேற்று மறுவாக்குப் பதிவு நடந்த நிலையில் 34 சதவீதம் பேர், அதாவது 186 பேர் மட்டுமே வாக்களித்துள்ளனர். கடந்த முறையை விட 34 வாக்குகள் குறைந்துள்ளன.

தமிழக சட்டமன்றத் தேர்தல் தமிழகம் முழுவதும் கடந்த 6 ஆம் திகதி நடந்த தேர்தலின் போது, சென்னை தொகுதியில் உள்ள சீதாராம் நகர் டி.ஏ.வி. பள்ளியில் 92 வது ஆண்கள் வாக்குச்சாவடியிலிருந்து இரு மின்னணு இயந்திரங்களும் ஒரு கட்டுப்பாட்டு இயந்திரமும், விவிபாட் இயந்திரமொன்றும் விதிகளை மீறி ஊழியர்களால் எடுத்துச் செல்லப்பட்டதாக குற்றஞ் சாட்டப்பட்டது. பின்னர் விசாரணைகளில் அது நிரூபணமா கியதைத் தொடர்ந்து, மறுவாக்குப்பதிவுக்கு தேர்தல் ஆணையம் உத்தரவிட்டிருந்தது.

இதையடுத்து மறுவாக்குப்பதிவு நேற்றுக் காலை 7 மணிக்கு தொடங்கியது. இந்த வாக்குச்சாவடியில் 548 வாக்காளர்கள் உள்ள நிலையில் 186 பேர் மட்டுமே மறுவாக்களித்தனர். 6 ஆம் திகதி நடைபெற்ற வாக்களிப்பில் 220 பேர் வாக்களித்திருந்தனர்.

# தினசரி 25 ஆயிரம் பேருக்கு கொரோனாப் பரிசோதனை

## சென்னையில் நடப்பதாக தகவல்



பெருநகர சென்னை மாநகராட்சி, வளசரவாக்கம் மண்டலம் போரூரில் உள்ள நகரப்புற சமுதாய நல மருத்துவமனைகளில் பொதுமக்களுக்கு கொரோனா தடுப்பூசி வழங்கும் பணியினை மாநகராட்சி கமிஷனர் கோ.பிரகாஷ் நேற்று ஆய்வு செய்தார். பின்னர் ஊடகங்களைச் சந்தித்த அவர்,

"சென்னையைப் பொறுத்தவரை கடந்த சில நாள்களாக 2,400 என்ற எண்ணிக்கையில் கொரோனாப் பாதிப்பு இருந்து வருகிறது. கடந்த ஆண்டைக் காட்டிலும், தற்போது பாதிப்பு அதிகமாகவே இருக்கிறது. கொரோனாவின் 2ஆவது அலையைத் தடுக்க பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

தற்போது சென்னையில் கொரோனா பரிசோதனை எண்ணிக்கை அதிகப்படுத்தப்பட்டுள்ளது. தினசரி இருபதாயிரம் பரிசோதனைகள் செய்யப்படுகின்றன. இதனை இருபத்தைந்தாயிரமாக்குவதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 45 வயதுக்கு மேற்பட்ட பொதுமக்கள் அனைவரும் கட்டாயம் தடுப்பூசி போட்டுக்கொள்ள வேண்டும். சென்னையில் இதுவரை 12 லட்சம் பேருக்கு தடுப்பூசி போடப்பட்டுள்ளது" என்று கூறினார்.

இந்த ஆய்வின் போது இணை கமிஷனர் டாக்டர் ஆல்பி ஜான் வர்கீஸ் உட்பட அதிகாரிகள் பலரும் உடனிருந்தனர்.

# மாமல்லபுர சிற்பக்கலைஞர்களினால் உருவானது அயோத்தி ராமர் கோவில் மாதிரி மரச்சிற்பம்



உத்தரப் பிரதேச மாநிலம், அயோத்தியில் உள்ள ராமஜென்ம பூமியில் 161 அடி உயரத்தில் பிரமாண்டமான முறையில் ராமர் கோவில் கட்டுமானப் பணி நடந்து வருகிறது. இக்கோவிலில் வைப்பதற்காக தேக்கு மரத்திலான மாதிரிச் சிற்பம் ஒன்றை வடிவமைக்க மாமல்லபுரம் பெருமாளேரியில் உள்ள மானசா மரச்சிற்பக்கலை கூடத்திற்கு, ஸ்ரீராமஜென்ம தீர்த்த தேரா அறக்கட்டளையினர் ஒப்பந்தம் வழங்கியுள்ளனர்.

தமிழக அரசின் அங்கீகாரம் பெற்ற மரச்சிற்பக்கலைஞர் கே.ரமேஷ் தலைமையில் 25 க்கும் மேற்பட்ட மரச்சிற்பக் கலைஞர்கள் கடந்த 6 மாதமாக பணியாற்றி, தேக்கு மரத்தில் மூன்று அடி உயரத்தில் 340 தூண்களுடன் கூடிய அயோத்தி ராமர் கோவிலின் மாதிரி மரச்சிற்பத்தைத் தயார் செய்துள்ளனர்.

கருவறையுடன் அழகுர வடிவமைத்த சிற்பத்தின் பணிகள் அனைத்தும் முடிக்கப்பட்ட நிலையில், ராமர் கோவில் மரச்சிற்பம் அயோத்தி ராமர் கோவிலுக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது. ராமருக்கு உகந்த சிறப்புத் தினமான 21 ஆம் திகதி ராமநவமி அன்று இந்த மரச்சிற்பத்துக்கு சிறப்பு பூசை வழிபாடுகள் செய்யப்பட்டு, பின்னர் கோவில் வளாகத்தில் வைக்கப்படவுள்ளது.

# கேரளாவுக்கு வரும் வெளி மாநிலத்தினர் முன்பதிவு செய்வது கட்டாயமாக்கப்பட்டுள்ளது



கேரளாவில் கொரோனாத் தடுப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டு உள்ளன. அதுபோல், கட்டுப்பாடுகளும் கடுமையாக்கப்பட்டு உள்ளன.

நேற்று 1.50 லட்சத்துக்கும் மேற்பட்டோரிடம் பரிசோதனை நடத்தப்பட்டது எனவும் இன்றும் ஒரு லட்சத்துக்கு மேற்பட்டோரிடம் பரிசோதனைகள் நடைபெறுகின்றன எனவும் கூறப்படுகிறது. கேர ளாவுக்கு 50 லட்சம் டோஸ் தடுப்பூசிகள் உடனடியாக வேண்டும் என மத்திய அரசிடம் கோரிக்கையும் முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், வெளிமாநிலங்களில் இருந்து கேரளாவுக்கு வருபவர்கள் 'கோவிட் 19 ஜாக்ரதா கேரளா' என்ற இணையத் தளத்தில் முன்பதிவு செய்ய வேண்டும் என்ற நடைமுறை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளவரசர் பிலிப் உடல் ரோயல் வால்ட்டில் நல்லடக்கம் கண்ணீர் மல்க விடையளித்தனர் அரச குடும்பத்தினர்







இங்கிலாந்து அரச குடும்ப வரலாற்றில் நீண்ட காலம் இளவரசராக இருந்தவர் என்ற பெருமைக்குரிய இளவரசர் பிலிப் (வயது 99) கடந்த 9ஆம் திகதி வின்சர் கோட்டையில் காலமானார். இளவரசர் பிலிப்பின் இறுதிச்சடங்கு இன்று வின்சர் கோட்டை வளாகத்தில் உள்ள புனித ஜார்ஜ் தேவாலயத்தில் நடைபெற்றது.

முன்னதாக, வின்சர் கோட்டையில் இருந்து அவரது உடல் ஊர்வலமாக தேவாலயத்திற்கு கொண்டு வரப்பட்டது. இளவரசர் பிலிப், தான் விரும்பியபடி மாற்றி வடிவமைத்த லேண்ட்ரோவர் காரில், சவப்பெட்டி வைக்கப்பட்டு இறுதி ஊர்வலம் நடைபெற்றது. இறுதி ஊர்வலத்தில் இளவரசர்கள் வில்லியம், ஹாரி மற்றும் அரச குடும்பத்தின் மூத்த உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். ராணி எலிசபெத் ஊர்வலத்தில் வராமல், நேரடியாக தேவாலயத்திற்கு காரில் வந்து சேர்ந்தார். இதேபோல் ஊர்வலத்தில் பங்கேற்காத அரச குடும்ப உறுப்பினர்களும் காரில் வந்தனர்.

தேவாலயத்தில் பிரார்த்தனை மற்றும் இறுதிச்சடங்குகள் எல்லாம் நிறைவடைந்ததும், இளவரசர் பிலிப்புக்கு அரசியிடம் இருந்த அசைக்கமுடியாத விசுவாசம், அவர் நாட்டுக்குச் செய்த சேவை, அவரது தைரியம் போன்றவற்றை நினைவுகூர்ந்து வின்சரின் மதகுரு அஞ்சலி செலுத்தினார். நிறைவாக தேசிய கீதம் பாடப்பட்டது.


அதன்பின்னர் இளவரசர் பிலிப் உடல், தேவாலயத்தின் அடியில் உள்ள கல்லறைப் பகுதியான ராயல் வால்ட்டில் நல்லடக்கம் செய்யப்பட்டது. சவப்பெட்டியானது மின் மோட்டார் மூலம் ராயல் வால்ட் அறைக்குள் இறக்கப்பட்டது. அரச குடும்பத்தினர் துக்கத்துடன் கண்ணீர் மல்க பிலிப்புக்கு விடை கொடுத்து, பின்னர் அங்கிருந்து புறப்பட்டுச் சென்றனர்.

இறுதிச் சடங்கு மற்றும் ஊர்வலத்தில் ஆயுதப்படையினர் 700இற்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர். ஆனால், கொரோனா கட்டுப்பாடு காரணமாக புனித ஜார்ஜ் தேவாலயத்தில் நடந்த இறுதிச்சடங்கில் 30 பேர் மட்டும் பங்கேற்று அஞ்சலி செலுத்தினர்.

இளவரசர் பிலிப்பின் பாணியில் அவர் விரும்பிய வகையில் அவரது எண்ணங்களை பிரதிபலிக்கும் வகையில் இறுதி ஊர்வலம் மற்றும் இறுதிச்சடங்கு நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

பிரிட்டன் மற்றும் கிப்ரால்டர் உட்பட 9 இடங்களில் துப்பாக்கிக் குண்டுகள் முழங்க ஒரு நிமிட தேசிய மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. தேசிய மௌன அஞ்சலியை பிரதிபலிக்கும் விதத்தில், ஹீத்ரூ விமான நிலையத்தில் ஆறு நிமிடங்களுக்கு விமான சேவை நிறுத்தப்பட்டது. எந்த விமானமும் புறப்படவில்லை, எந்த விமானமும் தரையிறங்கவில்லை. மேலும், இளவரசர் பிலிப்பின் இறுதிச் சடங்கு நிகழ்ச்சியை ஒட்டி, அனைத்து முக்கிய விளையாட்டுப் போட்டிகளும் ஒத்தி வைக்கப்பட்டன.

## அமெரிக்க துணை அதிபருக்கு கொலை மிரட்டல்; தாதி கைது



அமெரிக்க துணை அதிபர் கமலா ஹரிஸ் அமெரிக்காவின் துணை அதிபராக பதவியேற்ற முதல் பெண்மணி. முதல் கறுப்பினத்தவர் மற்றும் முதல் ஆசிய அமெரிக்கர் ஆகிய சிறப்புகளை பெற்றார்.

இந்தநிலையில் கமலா ஹாரிசுக்கு கொலை மிரட்டல் விடுத்த தாதியை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

புளோரிடாவை சேர்ந்த தாதி நிவியன் பெட்டிட் (வயது 39). இவர் 2001-ஆம் ஆண்டில் இருந்து ஜாக்ச்ஹெல்த் திட்டத்தில் பணியாற்றி வந்தார்.

இவர் சிறையில் உள்ள தனது கணவருக்கு ஜிபே மூலம் வீடியோக்களை அனுப்பி உள்ளார். சிறையில் உள்ள கைதிகளை அவரது குடும்பத்தினருடன் இணைத்து ஜிபே என்ற கணினி பயன்பாடு மூலம் வீடியோக்களை அனுப்ப அனுமதிக்கப்படுகிறது.

நிவியன் பெட்டிட் பெல்ப்ஸ் கலைஞருக்கு அனுப்பிய வீடியோவில் துணை அதிபர் கமலா ஹரிசுக்கு கொலை மிரட்டல் விடுத்துள்ளார்.

இதுதொடர்பாக போலீசார் பதிவு செய்துள்ள குற்றச்சாட்டில் கூறி இருப்பதாவது:-

பெப்ரவரி 13ஆம் திகதி முதல் பெப்ரவரி 18ஆம் திகதி வரை நிபியன் பெட்டிட் அனுப்பிய வீடியோவில், துணை அதிபர் கமலா ஹரிஸ் மீது கொலை மற்றும் உடல் ரீதியான தீங்கு விளைவிப்பதாக தெரிந்தே மற்றும் வேண்டுமென்றே மிரட்டல் விடுத்தார்.

அதிபர் ஜோபைடன் மற்றும் துணை அதிபர் கமலா ஹரிஸ் ஆகியோரின் மீதான வெறுப்பை பற்றி பேசுகிறார். மேலும் கமலா ஹரிசை கொல்வது பற்றியும் பேசி உள்ளார்.

ஒரு வீடியோவில் கமலா ஹாரிஸ் நீங்கள் இறக்க போகிறீர்கள். உங்கள் நாள்கள் ஏற்கனவே எண்ணப்பட்டுவிட்டன.

பெப்ரவரி18ஆம் திகதி அனுப்பப்படும் என்றும் மற்றொரு வீடியோவில், நான் துப்பாக்கி வாங்க செல்கிறேன். நான் கடவுளிடம் சத்தியம் செய்கிறேன். இன்றிலிருந்து 50 நாள்களில் நீங்கள் (கமலா ஹரிஸ்) இறக்கப் போகிறீர்கள். இந்த நாளை குறித்துவைத்துக் கொள்ளுங்கள் என்று கூறி உள்ளார்.

இதுதொடர்பாக அமெரிக்க ரகசிய சனல் விசாரணை நடத்தி வந்தது. தாதி நிவியன் பெட்டிடின் நடவடிக்கைகளை கண்காணித்து வந்த நிலையில் அவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

## ரஷ்ய எதிர்க்கட்சித் தலைவரான அலெக்சி நவால்னி எந்த நேரத்திலும் மரணிக்கலாம்; மருத்துவர் அதிர்ச்சி தகவல்



ரஷ்யாவின் எதிர்க்கட்சி தலைவராக செயல்பட்டு வருபவர் அலெக்சி நவால்னி(44). ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடினின் ஆட்சிக்கு எதிராக பல ஆண்டுகளாக போராட்டத்தில் ஈடுபட்டு வந்த அலெக்சி நவால்னி கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் நரம்பு மண்டலத்தை தாக்கும் கொடிய விஷத்தன்மை உடைய நோவிசோக் என்ற வேதிப்பொருள் தாக்குதலுக்கு உள்ளானார். இந்த தாக்குதல் ரஷிய அதிபரால் திட்டமிட்டு நடத்தப்பட்டது என குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

இந்த வேதிப்பொருள் தாக்குதலால் கோமா நிலைக்கு சென்ற நவால்னி ரஷ்யாவில் இருந்து ஜெர்மனிக்கு கொண்டு செல்லப்பட்டு மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டது. சிகிச்சைக்கு பின் குணமடைந்த நவால்னி கடந்த ஜனவரி மாதம் 17-ம் திகதி மீண்டும் ரஷ்யா வந்தார்.

மாஸ்கோ விமானநிலையம் வந்து இறங்கிய நவால்னியை ரஷ்ய பொலிஸார் கைது செய்தனர். 2014-ம் ஆண்டு பதியப்பட்ட மோசடி வழக்கில் நவால்னி கைது செய்யப்பட்டார் என ரஷ்ய பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த வழக்கில் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்ட நவால்னிக்கு இரண்டரை ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டது. இதையடுத்து, அவர் மாஸ்கோவில் உள்ள சிறையில் அடைக்கப்பட்டார்.

இதற்கிடையில், சிறைச்சாலையில் அடைக்கப்பட்ட நவால்னி தனது எதிர்ப்பை வெளிப்படுத்தும் விதமாக கடந்த 3 வாரங்களாக சிறையிலேயே உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறார். இதனால், அவரது உடல் நிலை மிகவும் மோசமடைந்து வருகிறது.

இந்நிலையில், உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டு வரும் அலெக்சி நவால்னி எந்த நேரத்திலும் உயிரிழக்ககூடும் என்று அவரது மருத்துவர் யார்சொல்ஸ்வா அஷீக்மின் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்ட பேஸ்புக் பதிவில், சிறையில் அடைக்கப்பட்டுள்ள அலெக்சி நவால்னியின் உடல்நிலை தொடர்பாக அவரது குடும்பத்தினர் கொடுத்த தரவுகளை பரிசோதனை செய்ததில் அவரின் உடலில் பொட்டாசியத்தின் அளவு தீவிரமாக உயர்த்தப்பட்டது. இது மாரடைப்பு மற்றும் சிறுநீரகத்தை பலவீனமடைய செய்யும். எங்கள் நோயாளி (அலெக்சி நாவல்னி) எந்த நேரத்திலும் உயிரிழக்கக் கூடும்' என தெரிவித்துள்ளார்.




விளம்பரத் தொடர்புகளுக்கு -
மின்னஞ்சல் -
kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம்-
076 443 8622

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனவாதம் பேசுவதை நிறுத்தி விட்டு தேசியவாதம் பேச ஆரம்பிப்போம்

## அதாவுல்லா தெரிவிப்பு



இனவாதம் பேசுவதை நிறுத்தி விட்டு தேசியவாதம் பேச ஆரம்பிப்போம் என தேசிய காங்கிரஸின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஏ.எல்.எம்.அதாவுல்லா தெரிவித்தார்.

கிண்ணியா பொது நூலக மண்டபத்தில் நேற்று மாலை இடம்பெற்ற நிகழ்வின்போது இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்தும் உரையாற்றுகையில் இலங்கை சுதந்திரமடைய முன்னர் ஒல்லாந்தர்,போர்த்துக்கேயர் என நமது நாட்டை ஆக்கிரமிப்பு செய்தார்கள் ஆனால் தற் போது மறைமுகமாக அது நடக்கிறது முஸ்லிம் என்ற பேரில் சஹ்ரான் என்கின்ற குண்டுதாரியை ரிமோட் ஊடாக இயக்கினார்களோ என்னவோ தெரியாது அது இன்று நாடு முழுவதும் சர்வதேசம் முழுதும் பரவலாக பேசப்படுகிறது.

முஸ்லிம்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் இந்த நாட்டில் பகை இல்லை அது போன்று முஸ்லிம்களுக்கும் தமிழ் சிங்களவர்களுக்கும் பகை இல்லை தொன்று தொட்டு பல்லாண்டு காலம் சகோதரத்துவத்துடன் வாழ்ந்தவர்கள் பகைகளை அன்றே 1915 களில் இந்தியாவில் இருந்து வந்த ஒரு கூட்டம் உருவாக்கியது அப்பாவி முஸ்லிம்களையும் அப்பாவி கிறிஸ்தவர்களையும் நமது நாட்டில் குழப்பியடித்து இனவஞ்சமும் வர்மத்தையும் தோற்றுவித்திருக்கிறார்கள்.

இதற்கான மருந்துகளை கட்டவே தேசிய காங்கிரசும் இருக்கிறது, வெளிநாட்டு அழுத்தங்கள் இல்லாமல் யாப்பு ஒன்று உருவாக்கப்படவேண்டும் மாகாண சபைத் தேர்தலை விரும்பவில்லை நமக்கான காணி கல்வி கலாசார மொழி உரிமைகள் போன்ற அதிகாரங்களையே வேண்டி நிற்கிறோம் அரசு 3/2 பெரும்பான்மை பெற்றது மாகாண சபைத் தேர்தலை நடாத்தவல்ல நாட்டு மக்கள் வாழ்வதற்கான ஒரு யாப்பை உருவாக்கி அதனை எப்படி பாவிப்பது பற்றியே பேசப்படவேண்டும் கடந்த ஐக்கிய தேசியக் கட்சி அரசின் போது நல்லாட்சியில் மாகாண சட்ட மூலத்தை நான்கு மணி நேரத்துக்குள் நிறைவேற்றி ரிஷாத் ஹக்கீம் போன்றவர்கள் பெண் பிரதிநிதித்துவம் அதிகரிப்பு என்ற கெசட்டை கொண்டு வந்தார்கள் அது சிறுபான்மைக்கு பாதிப்பு என நாங்கள் சொன்னோம் ஏற்கவில்லை ஒருபுறம் கொரோனா பொருளாதார கஷ்ட நிலை என தொடர்கிறது

வெளிநாட்டுவங்குரோத்துகபளீகரத்தில் இருந்து இலங்கை விடுபட வேண்டும் ஐரோப்பா போன்ற நாடுகள் உட்பட இலங்கையை சுற்றியுள்ள நாடுகளும் நம் தேசத்தையே வேண்டும் என சொல்கிறார்கள் யானை சண்டை பிடிக்க தகரப் பத்தைகள் அடிபடுவது போல் இலங்கை அடிபட முடியாது வெளிநாட்டின் கோரப் பிடியில் இருந்து இலங்கை பாதுகாக்கப் படவேண்டும் . இலங்கையில் உள்ளவர்கள் தேசப்பற்றுள்ளவர்களாகவும் தேசியவாதிகளாகவும் நாட்டின் பங்காளிகளாக மாற வேண்டும் என்றார்.

# கைத்துப்பாக்கியுடன் ஒருவர் கைது

களுத்துறை பொந்துபிட்டி பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட கைத்துப்பாக்கி ஒன்றுடன் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று பிற்பகல் இந்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டதாக பொலிஸ் ஊடக பேச்சாளர், பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார். களுத்துறை குற்றப்பிரிவுக்கு கிடைத்த தகவலுக்கு அமைய இந்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்ட பொலிஸ் ஊடக பேச்சாளர் தெரிவித்தார்.

குறித்த கைத்துப்பாக்கியுடன் 6 தோட்டாக்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் பொந்துபிட்டி பகுதியில் வசிப்பவர் என தெரிவிக்கப்படும் நிலையில் இன்று அவர் மத்துகம நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட உள்ளார்.

# முருங்கை மரக்கன்றுகள் விநியோகம்

முருங்கை மரத்தின் மருத்துவ மதிப்பு மற்றும் பொருளாதார பெறுமதியை மக்களிடம் பிரபலப்படுத்துவதற்காக ‘வாழ்க்கைக்கான தோட்டம்’ என்னும் தேசிய வேலைத் திட்ட நிகழ்வு இடம்பெற்று வருகின்ற நிலையில் விகாரை மற்றும் மதஸ்தலங்களில் இலவசமாக முருங்கை கன்றுகள் விநியோகம் செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன் ஒரு கட்டமாக திருகோணமலை மாவட்டத்துக்கான பிரதான நிகழ்வு இடம்பெற்றுள்ளது. விவசாய அமைச்சின் மூலமாக குறித்த திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

குறித்த நிகழ்வு நேற்று கந்தளாய் கமநல சேவை நிலையத்துக்கு உட்பட்ட கந்தளாவ போதி மண்டாலாம விகாரையில் இடம் பெற்றது.

கமநல சேவைகள் அபிவிருத்தி திணைக்களத்தின் மாவட்ட உதவி ஆணையாளர் எஸ்.வருணி தலைமையில் நடைபெற்ற நிகழ்வுக்கு திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு இணைத் தலைவருமான கபில நுவன் அத்து கோரள பிரதம விருந்தினராக கலந்து கொண்டு பெண் விவசாயிகள் மற்றும் விவசாய சம்மேளனங்களை சேர்ந்த பயனாளிகளுக்கான முருங்கை கன்றுகளை வழங்கி வைத்தார்.

இதில் முதல் கட்டமாக நாடாளுமன்ற உறுப்பினர் கபில நுவன் திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் சமன்தர்சன பாண்டிகோராள மற்றும் மாவட்ட உதவி ஆணையாளர் ஆகியோர்களுக்கும் கன்றுகளை வழங்கி வைத்தார்.

‘முருங்கை மரத்தின் பயன்கள் நாட்டில் உள்ள அனைவருக்கும் எனும் தொனிப்பொருளுக்கு அமைவாக பொருளாதாரப் பெறுமதியை மக்களிடம் பிரபலப்படுத்துவதற்கான வாழ்க்கைக்கான வேலைத்திட்டத்தின் கீழ் முருங்கை மரக்கன்றுகள் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டன.



இவ் நிகழ்வில் முள்ளிப்பொத்தானை கமநல சேவை நிலைய பொறுப்பதிகாரி கே.ஜீ. அமர வன்ச மற்றும் பிரதேச சபை தவிசாளர்கள் மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள், பொலிஸ் அதிகாரிகள் என பலரும் கலந்து கொண்டார்கள்.

# பள்ளிவாசல்களில் சுகாதார வழிமுறை கண்காணிப்பில் சுகாதாரத் தரப்பினர்

சம்மாந்துறை பிரதேச பள்ளிவாசல்களில் சமூக இடைவெளி பேணுதல், முகக்கவசங்கள் அணிதல், தொழுகை விரிப்புக்கள் உள்ளதை உறுதிப்படுத்தல் போன்றவற்றை அமுல்படுத்த சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர். எஸ்.ஐ.எம்.கபீர் அவர்களின் ஆலோசனையின் கீழ் பொதுச்சுகாதார மேற்பார்வைப் பரிசோதகர் ஐ.எல். றாஸிக் தலைமையில் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் கள விஜயம் செய்து பார்வையிட்டனர்.

சுகாதார வழிமுறைகளை பின்பற்றாதவர்களை வீடுகளுக்கு திருப்பியனுப்பி சுகாதார வழிமுறைகளை பின்பற்றி தொழுகைக்கு வருமாறு திருப்பி அனுப்பிவைத்தனர்.

உலகில் பரவலாக பரவிவரும் கொரோனா தொற்று இலங்கையிலும் வேகமாகப் பரவிவருவதை கட்டுப்படுத்த சுகாதார திணைக்களம் கடுமையான முறையில் சுகாதார வழிமுறைகளை பின்பற்றுவதை வலியுறுத்தி வருகிறது.

இந்த செயற்பாடுகளுக்கு பொதுமக்களின் பங்களிப்பும் ஒத்துழைப்பும் இருந்தால் மட்டுமே இந்த வேலைத்திட்டத்தை வெற்றிகரமாக கொண்டுசெல்ல முடியுமென சுகாதாத் தரப்பு பொதுமக்களை கேட்டுக்கொள்கிறது.

# செவிப்புலன் வலுவற்ற பெண்களின் ஆளுமை வெளிப்படுத்தல் மட்டக்களப்பில் இன்று சட்ட விழிப்புணர்வுக் கருத்தரங்கு

செவிப்புலன் வலுவற்ற பெண்களின் ஆளுமை வெளிப்படுத்தலும் பெண்களின் பாதுகாப்பு தொடர்பான சட்ட விழிப்புணர்வு கருத்தரங்கு மட்டக்களப்பில் இன்று நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இயங்கி வரும் தன்னார்வ தொண்டு நிறுவனமான அருவி பெண்கள் வலையமைப்பானது மட்டக்களப்பு மாவட்டத்தில் 10 பிரதேச செயலக பிரிவுகளில் சமூக மேம்பாட்டுக்கான உட்கட்டமைப்பு அபிவிருத்தி, மாணவர்களுக்கான கல்வி, சுகாதாரம், குடிதண்ணீர், சமூக பாதுகாப்பு போன்ற பல்வேறு அபிவிருத்தி வேலைத் திட்டங்களை மட்டக்களப்பு மாவட்ட செயலகத்துடன் இணைத்து முன்னெடுத்து வருகின்றது.

அந்தவகையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள செவிப்புலன் வலுவற்றோர்களில் பெண்களின் ஆளுமை வெளிப்படுத்தும் வகையில் பெண்களின் பாதுகாப்பு, அவற்றுக்கான அணுகுமுறைகள், அதனை வெளிப்படுத்தல் போன்றவற்றுக்கான தீர்வினை பெற்றுக் கொள்ளும் வகையில் அருவி பெண்கள் வலையமைப்பு புதிய செயற்திட்டத்தினை இன்று ஆரம்பித்து வைத்துள்ளது.

அதற்கான ஒப்பந்தம் கைச்சாத்திடும் நிகழ்வு மட்டக்களப்பு தன்னாமுனை மியாமி மண்டபத்தில் நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட அருவி பெண்கள் வலையமைப்பின் மாவட்ட பணிப்பாளரும் சட்டத்தரணியுமான திருமதி. மயூரி ஜனன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக மாவட்ட அரசாங்க அதிபர் கே. கருணாகரன், மற்றும் சிறப்பு விருந்தினர்களாக பிரதேச செயலாளர்களான, ராஜ் பாபு, திருமதி. நவசிவாயம் சத்தியானந்தி ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் அருவி பெண்கள் வலையமைப்பின் குழு உறுப்பினர்கள், மாவட்ட செவிப்புலன் வலுவற்றோர் நிறுவனத்தின் அங்கத்தவர்கள் என பலர் கலந்துகொண்டனர்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# சென்னை அணிக்காக 200 போட்டிகள்! டோனியின் சாதனை

ஐ.பி.எல். கிரிக்கெட்டில் நேற்று முன்தினம் இரவு மும்பை வான்கடே மைதானத்தில் நடந்த லீக் ஆட்டத்தில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணி 6 விக்கெட் வித்தியாசத்தில் பஞ்சாப் கிங்ஸை வென்றது.

சென்னை சூப்பர் கிங்ஸ் அணிக்காக டோனி ஆடிய 200 ஆவது போட்டி இதுவாகும். ஐ.பி.எல். இல் 176, சம்பியன்ஸ் லீக்கில் 24 போட்டிகள் என்று மொத்தம் 200 போட்டிகளில் சென்னை அணிக்காக டோனி விளையாடி இருக்கிறார். இதில் 199 போட்டிகளுக்கு அவர் அணித்தலைவராகவும் இருந்திருக்கிறார்.

இந்த மைல்கல் சாதனை குறித்து டோனியிடம் கேட்கப்பட்ட போது, 'மிகவும் வயதாகி விட்டது என உணர்கிறேன்' - என்று நகைச்சுவையாகப் பதில் அளித்திருக்கிறார் அவர்.

'இது ஒரு நீண்ட பயணம். வித்தியாசமான சூழல், வெவ்வேறு நாடுகள் என்று மிகவும் சுவாரஸ்யமான ஒரு காலம். கடந்த 2008 ஆம் ஆண்டில் இருந்து எனது ஐ.பி.எல். பங்களிப்பு தொடங்கியது. அதன் பிறகு தென்னாபிரிக்கா, டுபாயில் எல்லாம் விளையாடிவிட்டு மீண்டும் தற்போது சொந்த நாட்டில் விளையாடுகிறேன்.

சென்னை சேப்பாக்கத்தை எடுத்துக் கொண்டால் 2011 ஆம் ஆண்டு வரை எங்களுக்கு மகிழ்ச்சிகரமான ஆடுகளமாக அது இருந்தது. அப்போது சுழலுக்கு ஒத்துழைக்கும். வேகப்பந்து வீச்சுக்கும் உதவிகரமாக இருக்கும். ஆனால் ஆடுகளத்தை மறுசீரமைப்பு செய்த பிறகு அதன் தன்மை மாறிவிட்டது. அதன் பிறகு அங்குள்ள சூழலுக்கு தக்கபடி மாற்றிக்கொள்வது என்பது மிகவும் கடினமாக இருக்கிறது.

அதே சமயம், தற்போதைய மும்பை வன்கடே ஆடுகளத்தை எடுத்துக் கொண்டால் மிகவும் சிறப்பாக இருக்கிறது. ஆனால் எல்லாமே போட்டிக்குரிய தினத்தின் கால நிலையைப் பொறுத்ததே. இன்றைய ஆட்டத்தின்போது ஆடுகளத்தில் பந்தின் நகர்வுத் தன்மை நன்றாக இருந்தது. ஆனால், அதிக அளவில் 'ஸ்விங்' ஆகவில்லை. பனிப்பொழிவு இல்லாததால் பந்து வீச்சு எடுபட்டது' என்று தெரிவித்தார் டோனி.

சென்னை அணிக்காக 200 ஆட்டங்களில் ஆடியுள்ள முதல் வீரர் என்ற பெருமையைப் பெற்றுள்ள கப்டன் டோனிக்கு அந்த அணியின் தலைமைப் பயிற்சியாளர் ஸ்டீபன் பிளமிங் புகழாரம் சூட்டியுள்ளார்.

அவர் கூறுகையில், 'டோனியின் நீண்ட பயணத்தைப் பாராட்டியாக வேண்டும். 200 ஆட்டங்களில் விளையாடியுள்ள போதிலும், இன்னும் அணிக்காக தனது சிறப்பான பங்களிப்பை அளிப்பதில் ஆர்வமுடன் உள்ளார். சென்னை அணி வளர்ந்து நிற்கிறது. அதோடு சேர்ந்து டோனியும் வளர்ந்துள்ளார். அவருக்கும் அணிக்கும் இடையிலான உறவு அருமையானது - கன கச்சிதமானது. சென்னை சூப்பர் கிங்சின் இதயத் துடிப்பாக டோனி இருக்கிறார். அதில் எந்த சந்தேகமும் இல்லை' - என்று குறிப்பிட்டுள்ளார்.






# ஐ.பி.எல். 2021 மும்பைக்கு மற்றுமொரு வெற்றி!

ஐ.பி.எல். 2021 தொடரில் நேற்று நடைபெற்ற ஒன்பதாவது லீக் போட்டியில், சன்ரைசஸ் ஹைதராபாத் அணியை 13 ஓட்டங்களால்வீழ்த்திமும்பைஇந்தியன்ஸ்அணிவெற்றிபெற்றுள்ளது.

சென்னை மைதானத்தில் இடம்பெற்ற இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மும்பை அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

அதன்படி முதலில் களமிறங்கிய மும்பை அணி 20 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுக்களை இழந்து 150 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் குயின்ரன் டி கொக் 40 ஓட்டங்களையும் பொலார்ட் 35, ரோஹித் சர்மா 32 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர். பந்துவீச்சில் முஜீப் மற்றும் விஜய் சங்கர் இருவரும் தலா இரண்டு விக்கெட்டுக்களையும் கலீல் அஹமட் ஒரு விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனையடுத்து 151 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்குடன் துடுப்பெடுத்தாடிய சன்ரைசஸ் ஹைதராபாத் அணி, 19.4 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 137 ஓட்டங்களைப் பெற்று 13 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. ஜொனி பெயர்ஸ்டோ 43 ஓட்டங்களையும் டேவிட் வோர்னர் 36, விஜய் சங்கர் 28 ஓட்டங்களையும் பெற்றனர். மும்பை அணியின் ட்ரெண்ட் போல்ட்டும் ராகுல் சஹரும் தலா மூன்று விக்கெட்டுக்களை கைப்பற்றினர்.

இப்போட்டியின் ஆட்ட நாயகனாக 22 பந்துகளில் 3 சிக்ஸர்கள், ஒரு பவுண்டரியோடு 35 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்ட பொலார்ட் தெரிவானார்.

இந்தப் போட்டியின் முடிவில் அணிகளுக்கான புள்ளிப் பட்டியலில் மும்பை இந்தியன்ஸ் அணி 4 புள்ளிகளோடு முதலிடத்திலும், ரோயல் சலஞ்சர்ஸ் 4 புள்ளிகள் பெற்றாலும் இரண்டாவது இடத்திலும் உள்ளன. சென்னை சூப்பர் கிங்ஸ் 2 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்தில் இருக்கிறது.

# அட்மினின் டுவிட்டர் பதிவை நீக்கிய மன்செஸ்டர் சிட்டியின் ஃபோடன்


சமீபத்தில் நடைபெற்று முடிந்த சம்பியன்ஸ் லீக் போட்டியின் காலிறுதி ஆட்டத்தில் ஜேர்மனி நாட்டைச் சேர்ந்த டோர்ட்மண்ட் அணியை வீழ்த்தி அரையிறுதிச் சுற்றுக்கு மன்செஸ்டர் சிட்டி அணி முன்னேறியது. அரையிறுதி சுற்றில் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த பிஎஸ் ஜேமைன் அணியை எதிர்கொள்ளவிருக்கிறது.

காலிறுதி ஆட்டம் முடிந்ததும் மன்செஸ்டர் யுனைடெட் அணியின் இளம் நட்சத்திரமான ஃபோடனின் அட்மின், ஜேமைன் அணியின் நட்சத்திர வீரரான எம்பாப்பேயை டக் செய்து 'விரைவில் சந்திப்போம்' என்று டுவீட் செய்துள்ளார்.

இந்த டுவீட் ஃபோடனை ஏதோ ஒரு வகையில் கோபமடையச் செய்ததனால், அந்த டுவீட்டை அழித்து மட்டுமல்லாமல் அவருடைய அட்மினையும் அவர் நீக்கியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக, 'இது போன்று சமூக வலைத்தளப் பக்கங்களை நிர்வகிக்க, வேறு நபர்களைப் பணிக்கு அமர்த்துவது நல்லதல்ல' என்று மன்செஸ்டர் யுனைட்டெட் அணியின் முன்னாள் கப்டன் நெவில் டுவீட் செய்துள்ளார்.

ஃபோடனுடைய அனுமதியுடன் தான் அந்தப் பதிவினை மேற்கொண்டதாக அட்மினாக செயற்பட்ட தனியார் நிறுவனத்தின் சார்பில் விளக்கம் அளிக்கப்பட்டுள்ளமையும் இங்கே கவனிக்கத்தக்கது.




# ஐ.பி.எல். இல் அதிக சிக்ஸர் அடித்த இந்தியர் டோனியைக் கடந்த ரோஹித் சர்மா

ஹைதராபாத்துக்கு எதிரான போட்டியில் மும்பை அணியின் தலைவர் ரோஹித் சர்மா இரண்டு சிக்ஸர்களை அடித்திருந்தார். இதையடுத்து ஐ.பி.எல். இல் அவரது ஒட்டுமொத்த சிக்ஸர்களின் எண்ணிக்கை 217 ஆக உயர்ந்தது. இதன் மூலம் ஐ.பி.எல். தொடர்களில் அதிக சிக்ஸர்களை அடித்த இந்திய வீரர் என்ற சாதனையை சென்னை அணித்தலைவர் டோனியிடம் இருந்து எடுத்துக் கொண்டார்.

ஐ.பி.எல். தொடர் வரலாற்றில் அதிக சிக்ஸர்கள் அடித்தவர்களின் பட்டியலில் பஞ்சாப் வீரர் கிறிஸ் கெய்ல் (351 சிக்ஸர்கள்), பெங்களூரு வீரர் டிவில்லியர்ஸ் (237 சிக்ஸர்கள்) இருவருக்கும் அடுத்த இடத்தை ரோஹித் சர்மா பிடித்துள்ளார்.




## ஐ.பி.எல் 2021 இன்று இரண்டு போட்டிகள்!


*ஐ.பி.எல்.கிரிக்கெட் 2021 தொடரில் இன்று இரண்டு போட்டிகள் நடைபெறுகின்றன.*

*இலங்கை நேரப்படி இன்று மாலை 3.30 க்கு ஆரம்பமான முதல் போட்டியில் ரோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர், கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிகளும், 7.30 க்கு தொடங்கவுள்ள இரண்டாவது போட்டியில் டெல்லி கப்பிட்டல்ஸ், பஞ்சாப் கிங்ஸ் அணிகளும் மோதுகின்றன. முதல் போட்டி சென்னையிலும் இரண்டாவது மும்பையிலும் இடம்பெறுகின்றன.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்து, ஆறு ஆண்டுகள் ஆட்சிக்கு வருபவர்கள் நாட்டின் நிலங்களைத் தாரைவார்க்க முடியாது

## ஓமல்பே தேரர் கடுங் காட்டம்



ஐந்து அல்லது ஆறு ஆண்டுகளுக்கு ஆட்சிக்கு வருபவர்களுக்கு பல நூற்றாண்டுகளாக நாட்டில் உள்ள நிலங்களை பல்வேறு குழுக்களிடம் ஒப்படைக்க எவ்வித உரிமையும் கிடையாது என்று வண ஓமல்பே சோபித தேரர் தெரிவித்துள்ளார்.

சில கட்சிகள் பல்வேறு உத்திகள் மூலம் நாட்டைக் கைப்பற்ற முயற்சிக்கின்றன எனவும் அவர் கூறினார்.

நாங்கள் 30 ஆண்டுகளாக கடுமையான துயரத்தை எதிர்கொண்டோம். அது ஆயுதப் பலத்தால் நாட்டின் ஒரு பகுதியைக் கைப்பற்ற பிரிவினைவாத பிரிவுகளால் மேற்கொள்ளப்பட்ட போராட்டமாகும். இப்போது நாம் இன்னொரு சிக்கலை எதிர்கொள்ள வேண்டி ஏற்பட்டுள்ளது.

இது நாட்டின் சில பகுதிகளை மற்ற உத்திகள் மூலம் கைப்பற்றும் முயற்சி. நவீன சீன கொலனி. இந்த நாடு வேறொரு நாட்டின் மாகாணம் என்பது மிகவும் தெளிவாக உள்ளது. அது உருவாகப்போகிறது. 1,115 ஏக்கர் நிலம் நாட்டின் கட்டுப்பாட்டில் இல்லை. அந்த நிலத்தில் இலங்கையின் பிரதிநிதித்துவம் இல்லை.

எனவே, நாடாளுமன்றத்தில் சட்டமன்றத்திற்கு பொறுப்பான இடத்தில் அமர்ந்திருக்கும் பொறுப்புள்ள பிரதிநிதிகள் இந்த நிலைமை தொடர்பில் அறிந்திருக்கிறார்களா என்று நாங்கள் கேட்கிறோம். இது புதிய ஆண்டில் எடுக்கப்பட வேண்டிய புதிய முடிவு. உருவாக்கப்படவுள்ள புதிய சீன கொலனி நிராகரிக்கப்பட வேண்டும். இது இந்த நாட்டில் நிறுவப்படக்கூடாது. - என்று அவர் மேலும் தெரிவித்தார்.

# பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் தலைக்கு எண்ணெய் வைக்கும் நிகழ்வு

புத்தாண்டு தினத்தினை முன்னிட்டு, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் தலைக்கு எண்ணெய் வைக்கும் தேசிய நிகழ்வு நேற்று (சனிக்கிழமை) காலை இடம் பெற்றுள்ளது.

குறித்த நிகழ்வு நேற்று காலை 7.16 மணியளவில் பிரதமரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நடைபெற்றுள்ளது.

இதன்போது ஆரம்ப நிகழ்வாக புத்த மந்திரயவில் பூஜை வழிபாட்டில் ஈடுபட்ட பிரதமர், பின்னர் தலைக்கு எண்ணெய் வைக்கும் நிகழ்வில் ஈடுபட்டார்.

இதன்போது மாதன்வல ரஜமஹா விகாராதிபதி வணக்கத்திற்குரிய வெல்லகிரிய சுமங்கள தேரர், பிரதமர் மஹிந்தவுக்கு தலையில் எண்ணெய் தேய்த்து ஆசீர்வதித்தார்.



குறித்த நிகழ்வில் பிரதமரின் பாரியார் ஷிரந்தி ராஜபக்ஷ, குடும்ப உறுப்பினர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர் சிரிபால கம்லத் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது

# வெளிநாடுகளில் இருந்து கடத்தப்படும் பொருள்; சிவப்பு அறிக்கையை வெளியிட தீவிர நடவடிக்கை

இலங்கை முழுவதும் கடந்த ஒரு வார காலமாக நடத்தப்பட்ட சோதனை நடவடிக்கைகளின் ஊடாக 128 கோடி ரூபா மதிப்புள்ள சுமார் 128 கிலோ ஐஸ் போதைப்பொருள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் இரண்டு பெண்கள் உட்பட 13 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும் பொலிஸ் ஊடக பேச்சாளர் பிரதி பொலிஸ் மாஅதிபர் அஜித் றோஹண தெரிவித்துள்ளார்.

கொழும்பு, வத்தளைப் பகுதியில் கடந்த 10ஆம் திகதி 113 கிராம் ஐஸ் போதைப்பொருள் மற்றும் 101 கிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

அவரிடம் நடத்தப்பட்ட விசாரணையைத் தொடர்ந்து, ஜா - எல பகுதியில் 15 கிலோ ஐஸ் போதைப்பொருள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் 06 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளமையுடன், கைது செய்யப்பட்டவர்களில் இரண்டு பெண்களும் அடங்குகின்றனர் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட மொத்தம் 07 சந்தேக நபர்களிடமும் போதைப்பொருள் தடுப்பு பிரிவினர் விசாரணை நடத்தினர். அதைத் தொடர்ந்து, ஐஸ் போதைப்பொருள் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த களஞ்சியசாலையொன்றை கைப்பற்றுவதற்கான இயலுமை பொலிஸாருக்கு கிடைத்தது என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் கூறினார்.

பின்னர் கடந்த 12ஆம் திகதி சப்புகஸ்கந்த பகுதியில் நடத்தப்பட்ட சோதனை நடவடிக்கைகளின் ஊடாக 110 கிலோ ஐஸ் போதைப் பொருள் பறிமுதல் செய்யப்பட்டது.

இந்த சம்பவம் தொடர்பில் மேலும் 05 சந்தேக நபர்களைப் பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பிரிவினர் கைது செய்தனர். அதைத்தொடர்ந்து மேலும் ஒரு சந்தேக நபர் கைது செய்யப்பட்டார். கைது செய்யப்பட்ட சந்தேக நபர் வச மிருந்து 2 ஆயிரத்து 433 கிராம் போதைப் பொருள் மீட்கப்பட்டுள்ளன என பொலிஸார் தெரிவித்தனர். இதுவரை நடத்தப்பட்ட விசாரணைகளின் ஊடாக 13 சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளமையுடன், சுமார் 128 கிலோ ஐஸ் போதைப்பொருள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

டுபாயில் தலைமறைவாகியுள்ள நிபுண என்ற நபரினாலேயே, இந்தப் போதைப் பொருள் விநியோகம் நடைபெற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி போலிஸ் மா அதிபர் அஜித் றோஹண தெரிவித்தார்.

அத்துடன், இந்த போதைப்பொருளை நாட்டுக்கு அனுப்பி வைக்கும் நடவடிக்கைகளில் ரூபன் மற்றும் லால் என்ற இருவரே செயல்பட்டுள்ளமையும் கண்டறியப்பட்டுள்ளது.

இந்த இரண்டு சந்தேக நபர்களும், இரு வேறு நாடுகளில் தலைமறைவாகியுள்ளனர் என அவர் குறிப்பிட்டார். இந்த சந்தேக நபர்கள் அனைவரும், இலங்கை போதைப்பொருள் கடத்தலுடன் தொடர்புடையவர்களெனவும் அவர் கூறினார்.

போதைப்பொருள் வெளிநாடுகளில் இருந்தே, இலங்கைக்கு கடத்தப்பட்டு வந்துள்ளன. இந்தப் போதைப்பொருள் கடத்தலுடன் தொடர்புடைய, வெளிநாடுகளில் வாழும் நபர்கள் தற்போது அடையாளம் காணப்பட்டுள்ளனர் எனவும், அவர்களைக் கைது செய்வதற்கான சிவப்பு அறிக்கை வெளியிடப்பட்டுள்ளன எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் றோஹண தெரிவித்தார்.

# 72 மணித்தியாலத்தில் விபத்தில் 40 பேர் சாவு

வீதி விபத்துகள் காரணமாக நேற்று காலை ஆறு மணியுடன் நிறைவடைந்த 72 மணித்தியாலத்திற்குள் 40 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதனால் வாகன சாரதிகள் மிகவும் கவனத்துடன் செயற்பட வேண்டும் என்று பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித்றோஹண தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு –

வீதி விபத்துகள் காரணமாக நேற்று காலை ஆறு மணியுடன் நிறைவடைந்த கடந்த 72 மணித்தியாலயத்திற்குள் 40 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்நிலையில் கடந்த 14 ஆம் திகதி 14 பேரும், 15 ஆம் திகதி 16 பேரும் உயிரிழந்துள்ளனர்.

வாகன சாரதிகளின் கவனக்குறைப்பாட்டின் காரணமாகவே இதுபோன்ற விபத்துகள் ஏற்பட்டு வருகின்றமையுடன், இந்த வார இறுதி தினத்தில் நாம் இது தொடர்பில் மேலும் அவதானத்துடன் செயற்பட வேண்டும்.

சித்திரை புத்தாண்டு பண்டிகை காரணமாக வீடுகளுக்குச் சென்றிருந்தவர்கள் அனைவரும் தற்போது தொழில் நிமித்தம் மீண்டும் செல்கின்றனர். இதன்போது வெளி மாவட்டங்களிலிருந்து பெருந்தொகையானவர்கள் மேல்மாகாணத்துக்கு வருகை தருகின்றனர். இந்த காலப்பகுதியில் பயணிகள் மற்றும் சாரதிகள் மிகவும் கவனத்துடன் செயற்பட வேண்டும்.

இதேவேளை, தற்போது அதிவேக நெடுஞ்சாலைகள் அதிகளவில் பயன்படுத்தப்பட்டு வருகின்றமையினால் அவை தொடர்பில் பொலிஸார் விசேட கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். இதன்போது அதிகூடிய வேகத்தில் பயணிக்கும் வாகனங்கள் மற்றும் வீதி சட்ட விதிகளுக்குப் புறம்பாகப் பயணிக்கும் வாகனங்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்படும். அதனால் வாகன சாரதிகள் வாகனங்களை செலுத்தும் போது வேறு விடயங்களில் கவனம் செலுத்துவடை விட வீதி மற்றும் வாகனம் தொடர்பிலே கவனம் செலுத்த வேண்டும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 18.04.2021இல் வெளியிடப்பெற்றது.